தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1981 பிப்ரவரி 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

ஒருவனை விளையாட்டாக இகழ்ந்து பேசுவதும் துன்பம் தரும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவர்கள் பகைவரிடத்தில் உள்ள நல்ல பண்புகளை அறிந்து போற்றுவர்.

1. இரங்கல் குறிப்பு

வாணியம்பாடி அருகே ஏற்பட்ட இரயில் விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று இரவு சென்னையில் இருந்து சென்ற ஏற்காடு விரைவு இரயில் வண்டி வாணியம்பாடிக்கு அருகே விபத்துக்குள்ளாகி, அதனால் பல பேர் உயிர் இழக்க நேரிட்டது என்றும், பலர் காயமுற்று உள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது என்பதை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்திலே காயமுற்றவர்கள் விரைவிலே குணம் அடைய இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நல்லெண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்திலே உயிரிழந்தவர்கள் குடும்பத்தாருக்கு இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். விபத்தில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இப்பேரவையின் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், அரை மணி நேரம் பேரவையின் நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படுகின்றன. காலை 9—36 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை காலை 9-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

காலை 9-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சற்றும் எதிர்பாராத வகையிலும் அதிர்ச்சி தரக் கூடிய வகையிலேயும் வாணியம்பாடிக்கு அருகில் இரயில் வண்டிகள் விபத்துக் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்திலே கொள்ளுகிறபோது, அதனுடைய முழு விளைவுகளும் தெரியாத இந்த அளவில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் அது சம்பந்தமாக செல்லவேண்டி இருக்கிற சூழ்நிலையின் காரணத்தால் பேரவையை இன்றைக்கு முழுமையாக ஒத்தி வைத்து, நாளைக் காலை 11-00 மணிக்கு மீண்டும் பேரவையைக் கூட்டுவதற்கு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் விருப்பத்திற்கிணங்க அவையை இன்றைக்கு ஒத்திவைக்கிறேன். நாளைக் காலை 11-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். நாளைக் காலை 'வினாக்கள்—விடைகள்' நேரம் இல்லை.

பின்னர் பேரவை காலை 9-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

38. 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகள் இவற்றில் சில துறைகள் தொடர்பான குறிப்புகளின் மீதான பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை பகுதி I (தமிழ்).

39. தமிழ்நாடு அரசின் 1960-61 முதல் 1971-72 ஆண்டு வரையிலான கணக்குகள் மீதான குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை (தமிழ்).